கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1971-72-ல் இதற்காக செலவிடப்பட்ட தொகை 1,050 ரூபாய். 1972-73-ல் செலவிடப்பட்ட தொகை 2,650 ரூபாய். 3,700 ரூபாய் செலவிட்ட பிறகும் இந்தக் கட்டிடம் அஸ்திவார நிலையிலிருந்து மேலே வரவில்லை. அதற்குக் காரணமாக இருந்தவர் மன்றத் தலைவர் என்று குறிப்புகள் சொல்லுகின்றன. ஆகவே, இந்த ஆண்டிலே இந்தக் கட்டிடத்தை கட்டி முடிக்க வேண்டுமென்று ஆணையருக்கு ஏற்கனவே ஆணையிடப்பட்டிருக்கிறது; உடனடியாகக் கட்டி முடிக்கப்படும்.

தேவணம்பாளையம் செல்ல பாதை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 52—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஊத்துக்குளி ஒன்றியம், தேவணம்பாளையத்திற்கு செல்வதற்கு பாதை வசதி ஏற்படுத்துவது பற்றி சம்பந்தப்பட்ட ஒன்றியத்திலிருந்து நடவடிக்கைக் குறிப்புகள் ஏதாவது வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) சாலை அமைக்க வேண்டிய நிலங்களை நில ஆர்ஜிதம் செய்து நடவடிக்கை எடுக்க ஒன்றிய ஆணையருக்கும் பெருந்துறை வட்டாட்சியருக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, அந்த ஊர் தோன்றிய காலத்திலிருந்து இதுவரையில் அந்த ஊருக்குச் செல்ல வேண்டிய வழி இல்லை. மேலும், கால்நடையாகச் சென்று கொண்டிருந்த அந்த பாதையில்கூட மழை பெய்த காரணத்தால் விதை போட்டு, நடக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அதை எல்லாம் பரிசீலனை செய்துதான் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வைரமடை-தொப்பம்பட்டி சாலை.

*வினா எண் 53—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கரூர்-கோவை நெடுஞ்சாலையில் இருந்து பிரியும் வைரமடை-தொப்பம்பட்டி சாலையில் தார் போடும் திட்டம் அரசு குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) இச்சாலையில் கி.மீ. 5-6 கிலோ மீட்டர் மற்றும் கி.மீ. 0-1 ஆகிய இரண்டு கிலோ மீட்டர் நீளத்திற்கு தார் போடும் வேலை நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கிலோ மீட்டர்தான் போடுகிறார்கள். ஏற்கெனவே 3 பேருந்துகள் செல்லுகின்றன. ஆகவே, இந்த ஆண்டு இந்தத் திட்டத்தை அரசு முடித்துக் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அதனுடைய மதிப்பீடு 7 இலட்சம் ரூபாய். சுமார் 13 கிலோ மீட்டர் தூரம் கற்சாலை உள்ளது. இந்த ஆண்டில் நடவடிக்கை எடுத்து, வேலையை முடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

கிராமப் புறங்களில் அளிக்கப்படும் ஆங்கிலமுறை மருத்துவம்.

*வினா எண் 54—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பல இடங்களில் ஓமியோபதி, சித்தா போன்ற மருத்துவ பட்டத்தை பெற்று, ஆங்கில முறைகளை பயன்படுத்தி கிராமப் புறங்களில் மருத்துவம் செய்து வருகிறார்களே, இதற்கு சட்டம் இடம் தருகிறதா?

(ஆ) இல்லையெனில் எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) 1970 முதல் எவ்வளவு பேர் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆங்கில முறை மருத்துவத்துடன் இந்திய முறை மருத்துவத்தையும் இணைத்து பயின்று (Integrated medicine) ஒருங்கிணைந்த மருத்துவக் கழகத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் மட்டுமே ஆங்கில முறைகளை பயன்படுத்த சட்டம் இடம் தருகிறது.

(ஆ) புகார் ஏதும் வராததால் இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) எழாது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமங்களிலே சூட்டும் கோட்டும் போட்டுக் கொண்டு ஹோமியோபதி பட்டம் பெற்றவர்கள் தங்களை எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் என்று சொல்லிக்கொண்டு கிராம மக்களை ஏமாற்றுகின்ற வகையிலே வைத்தியம் செய்து வருவது மருத்துவ சட்டப்படி குற்றமாகாதா? அதற்கான சட்டம் இல்லையென்றால் கடுமையானதொரு சட்டத்தைக் கொண்டு ஆவன செய்யுமா?